செய்தி வெளியீடு எண்.453 நாள் 06–08–2009

**குடிநீரின் தரத்தினை கண்காணிக்க சென்னைக் குடிநீர் வாரியத்தின் நடவடிக்கை**

வடசென்னை இராதாகிருஷ்ணன் நகர் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட பழைய வண்ணாரப்பேட்டை, புதிய வண்ணாரப்பேட்டை, கொருக்குப்பேட்டை, தண்டையார்பேட்டை மற்றும் கொடுங்கையூரின் ஒரு பகுதி ஆகியவை சென்னை மாநகராட்சி வட்டங்கள் 3 முதல் 13 வரை உள்ளடக்கியதாகும். இந்த 11 வட்டங்களில் மொத்தம் 831 தெருக்கள் உள்ளன. வட்டம் 10ல் அமைந்துள்ள எழில் நகர் பகுதி, பட்டேல் நகர் குடிநீர் பகிர்மான அமைப்பின் கடைசிப் பகுதியாகும். எனவே பட்டேல் நகர் குடிநீர் பகிர்மான நிலையத்திலிருந்து எப்பொழுதெல்லாம் குடிநீர் வழங்கும் அளவு குறைகிறதோ அப்பொழுதெல்லாம் குழாய் மூலம் குடிநீர் வழங்குதலில் பாதிப்பு ஏற்படுகிறது. ஆகவே எழில் நகர் பகுதிக்கு 3000 லிட்டர் கொள்ளளவு உள்ள 129 எண்ணிக்கை குடிநீர் தொட்டிகள் நிறுவப்பட்டு தினமும் 43 லாரி நடைகள் மூலம் குடிநீர் வழங்கப்பட்டு தொட்டிகளில் நிரப்பப்படுகின்றன.

5.8.09 மற்றும் 6.8.09 ஆகிய நாட்களில் மேற்கூறிய 11 வட்டங்களில் உள்ள நேதாஜி நகர், பட்டேல் நகர், சஞ்சய் காந்தி நகர், விநோபா நகர், இந்திராகாந்தி நகர், கண்ணகி நகர், கருமாரியம்மன் நகர், எழில் நகர், செரியன் நகர், வ உ சி நகர், மார்க்கெட் பாரம், திலகர் நகர், சேனியம்மன் கோவில் தெரு, கே வி தோட்டம், காரனேஷன் நகர், பழைய வண்ணாரப்பேட்டை பகுதிகளில் 146 இடங்களில் குடிநீர் மாதிரிகள் பரிசோதனைக்காக எடுக்கப்பட்டன. மேற்கூறிய இடங்களில் எழில் நகர் ‘அ’ ப்ளாக் 7வது தெரு மற்றும் கண்ணகி நகர் 4வது தெரு ஆகிய இரண்டு தெருக்களைத் தவிர மீதமுள்ள அனைத்து இடங்களிலும் குழாயில் பெறும் குடிநீரில் குளோரின் தரம் 0.20 பிபிஎம்(ppm) அளவிற்கும் மேல் உள்ளது. இந்த இரண்டு இடங்களில் குளோரின் அளவு குறைவாக உள்ளதால் இந்த இரண்டு தெருக்களிலும் குறைகளை நிவர்த்தி செய்யும் பணி நடைபெற்று வருகிறது. எனவே மாற்று ஏற்பாடாக இப்பகுதிக்கு லாரிகள் மூலம் குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

எழில் நகர் ‘அ’ ப்ளாக் 7வது தெரு, கண்ணகி நகர் 4வது தெரு ஆகிய பகுதிகளில் வழங்கப்படும் குடிநீரில் குளோரின் அளவு குறைந்துள்ளதால் இத்தெருக்களிலுள்ள குடிநீர் குழாய்கள் தனிமைப்படுத்தப்பட்டு, குடிநீர் கலங்கலாகும் இடங்கள் கண்டறியும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் தொடர்ந்து நடைபெற்று குறைகள் உடனடியாக நிவர்த்தி செய்யப்படும். எனவே மாற்று ஏற்பாடாக தரமான குடிநீர் லாரிகள் மூலம் வழங்கப்பட்டு வருகிறது. மேலும் இந்த 11 வட்டங்களிலுள்ள பகுதிகளுக்கு 3000 லிட்டர் கொள்ளளவு உள்ள 530 குடிநீர் தொட்டிகள் அமைத்து தினமும் 188 லாரி நடைகள் மூலம் குடிநீர் வழங்கப்பட்டு தொட்டிகளில் நிரப்பப்பட்டு வருகின்றன. இது தவிர கூடுதலாக தெரு விநியோகமாக 118 லாரி நடைகள் குடிநீர் இப்பகுதிகளுக்கு வழங்கப்படுகிறது.

சென்னை குடிநீர் வாரியத்தின் குடிநீர் தரக்கட்டுப்பாட்டு பிரிவு மற்றும் இயக்குதல் பராமரிப்பு பிரிவுகளும் இணைந்து குடிநீரின் தரத்தை உறுதி செய்ய தீவிரமான நடவடிக்கைகள் எடுத்து வருகின்றன. இரண்டு நடமாடும் ஆய்வு கூடங்கள் மூலம் பாதிக்கப்பட்ட இடங்களில் குடிநீர் மாதிரிகள் எடுத்து பரிசோதனை செய்யப்பட்டு வருகிறது. குடிநீரில் கலங்கல் ஏற்படுவதை நிவர்த்தி செய்யப்பட்டு குழாய் மூலம் குடிநீர் வழங்கப்படும். அதுவரை லாரிகள் மூலம் குடிநீர் தொடர்ந்து வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

************

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9.**